**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 207 of 2024

DATE : 25.09.2025

Depositions of witness for Prosecution

PW: 3

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி பானுமதி | Caste | |
| Father/Husband's Name | ராதா கிருஷ்ணன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2025

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் தற்பொழுது கோவை மாநகர போத்தனூர் மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.04.2020 அன்று திருவல்லிபுத்தூர் மதுவிலக்கு ஆய்வாளராக பொறுப்பில் இருந்த பொழுது நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்புராஜ், தலைமை காவலர் ரேணுகாந்த் மற்றும் காவலர் பழனிச்சாமி, தலைமை காவலர் பூபதி ராஜன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்ற பொழுது கிடைத்த ரகசிய தகவலின் படி பாடிகாப்பான் கண்மாய் ஓடை அருகே பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட முருகன் என்பவரை பிடித்து விசாரிக்க கள்ளச்சாராய ஊழல் போட்டு வைத்திருந்த கூட்டத்திற்காக அத்தாட்சியின் பெயரில் எதிரியை கைது செய்தும், அதன் பின்னர் எதிரி தன்னிச்சையாக 9 மணி அளவில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தோம், மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனி நபர் சாட்சிகள்

யாரும் கையெழுத்து செய்ய முன் வராததால் காவலர்கள் ஆகிய நாங்கள் கையெழுத்து செய்தோம். பின்னர் 11 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 418/2020 பிரிவுகள் 4(1)(g), 4(1)(b), 4(1)(aaa) r/w 4(1)(A) TNP Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உரிய பதிவுகளுக்கு பின் எதிரி முருகனை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் புதியதாக கடந்த 19.07.2020 அன்று ஆய்வாளராக திரு மாரியப்பன் பொறுப்பேற்ற பின்பு வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

ரகசிய தகவல் கிடைத்ததாக சொல்லி உள்ள நிலையில் அந்த ரகசிய தகவல் யாரிடம் இருந்து கிடைக்கப்பெற்றது என்று சொல்லவில்லை என்றால் ரகசிய தகவல் பற்றி வெளியே சொல்லக்கூடாது. எதிரியை பாடிகாப்பான் கண்மாய் ஓடைக்கு அருகில் வைத்து தான் அடையாளம் பார்த்தோம் என்றால் சரிதான். வழக்கின் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படுகின்ற நிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்தேனா என்றால் இல்லை சம்பவ இடத்தில் வைத்துதான் பதிவு செய்தேன். பொதுவாக முதல் தகவல் அறிக்கை காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யும் பொழுது அதில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டு காவல் நிலையம் வந்து தான் குற்ற எண் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் வைத்தேன் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் முழுவதுமாக பதிவு செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் உள்ள பொதுமக்களை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரும் கையெழுத்து செய்ய முன்வரவில்லை. எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளச்சாராயம் ஊரல் எங்கே வைத்து கைப்பற்றப்பட்டது என்றால் கண்மாயில் வைத்து தான் கைப்பற்றப்பட்டது. வழக்கு சொத்தான ஆட்டோவை எங்கே வைத்து கைப்பற்றினேன் என்றால் ஓடையில் வைத்து

தான் கைப்பற்றப்பட்டது. வீட்டில் இருந்த எதிரியை அழைத்து சென்று நாங்களே ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெற்று கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் உண்மையாக இருந்தால் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த தனிநபர் சாட்சிகளை சாட்சிகளாக சேர்த்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. கொரோனா பேரிடர் காலம் என்பதால் பொதுமக்கள் நடமாட்டம் பெரியதாக இல்லை. இந்த வழக்கிற்க்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல

மறு விசாரணை : – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு